பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 12 ஞாயிற்றுக்கிழமை 28.08.2022 கதிர் 184

## ஆளும் கட்சி எம். பிக்களை நாளை சந்திக்கும் ரணில்!



ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பு நாளை மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

# இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணை ஐ.நாவில் கொண்டுவருகின்றது பிரிட்டன்



### அமெரிக்கா, கனடா, ஜேர்மன் உள்ளிட்ட நாடுகள் இணை அனுசரணை வரைவு தயாரிப்புப் பணிகளில் சுமந்திரன் எம்.பியும் பங்கேற்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51ஆவது கூட்டத் தொடர் அடுத்த மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான புதிய பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டள்ளது.

பிரிட்டன் தலைமையில் கொண்டுவரப்படவுள்ள இந்தப் பிரேரணைக்கு அமெரிக்கா, கனடா, ஜேர்மன், வடக்கு மசிடோனியா, மலாவி, மொன்ரி நீக்ரோ ஆகிய நாடுகள் ☞7

## தமிழ் மக்கள் பக்கம் பல வெளிநாடுகள்!

### பயணம் குறித்து சுமந்திரன் கருத்து

ஜேர்மன், நோர்வே, டென்மார்க் உட்பட சுவீடன், பின்லாந்து உள்ளிட்ட நாடுகளின் முக்கியமான பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களில் தமிழ் மக்களுக்குச் சாதகமான சமிக்ஞை வெளியிடப்பட்டுள்ளது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். ☞2

# தீர்வை வழங்காமல் காலம் கடத்தும் அரசு

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கடும் விசனம்



மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் காலத்தைக் கடத்துகின்றன. இதை இனியும் அனுமதிக்க முடியாது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். ☞2

## புதிய புரளியே சர்வகட்சி அரசு

### சாடுகின்றார் சஜித்



எதிர்க்கட்சியை அரசு கழுவி ஊற்றினாலும், இன்று நாட்டையே கழுவி ஊற்றும் நிலை ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பஹுவ ☞7

## நில்வள கங்கையில் காதலன் மாயம்: ஆற்றில் குதித்து காதலி தற்கொலை!



மாத்தறை, ஒக. 28

மாத்தறை – பிட்டபெத்தர பகுதியில் நில்வள கங்கையில் நீராடச் சென்று காணாமல்போன இளைஞரின் காதலி நில்வள கங்கையின் கிளை ஆறான கிரமாராஓயாவில்குதித்துத்தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

காணாமல்போன மனுஷ்க யோஹான் என்பவரின் ☞2

### காற்றாலை மின் உற்பத்தி நிலையச் செயற்றிட்டங்கள்:

## மக்கள் எதிர்ப்புக்களின் பின்னணி ஆராயப்படும்

### தேவையேற்பட்டால் அமைச்சரவை தீர்மானம் மீள்பரிசீலனை செய்யப்படும் என்கிறது அரசு



மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இரண்டு காற்றாலை மின் உற்பத்தி நிலையச் செயற்றிட்டங்களுக்கு அதானி கிறீன் எனர்ஜி நிறுவனத்துக்குத் தற்காலிக அனுமதியே ☞2

## மகாவலி ஆற்றில் குதித்த இளைஞர் ஒருவர் மாயம்!

கண்டி, பேராதனைப் பகுதியில் பாலத்தில் இருந்து மகாவலி ஆற்றில் குதித்த இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

குறித்த நபர் ஆற்றில் குதித்த இடத்தில் சூட்கேஸ் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரி வித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள ☞2

## யாழ். நகரில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் தீ விபத்து!



### -உடைமைகள் எரிந்து நாசம் -

யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள பிரபல தனியார் விடுதியின் அறை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் கனடாவில் இருந்து வந்து குறித்த அறையில் தங்கியிருந்தவர்களின் உடைமைகள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன.

அறையில் உள்ள குளிரூட்டியில் ஏற்பட்ட ☞2

## அரைவாசிப்பேருக்கு திறமை இல்லையாம்

### காஞ்சன மீண்டும் குற்றச்சாட்டு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலிய சேமிப்பு முனையம், இலங்கை மின்சார சபை என்பவற்றின் பணியாளர்களில் அரைவாசிப் பேர் திறமையற்றவர்கள் என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தெரிவித்துள்ளார். ☞2



## சீனக்கப்பலின் வருகையின் பின் பூகோள அரசியலில் கொதிநிலை

### முன்னாள் எம்.பி. சரவணபவன் சுட்டிக்காட்டு

சீனாவின் உளவுக் கப்பலின் வருகையோடு பூகோள அரசியல் கொதிநிலைக்கு சென்றுள்ளது. இந்தக் கொதிநிலையும் இவ்வாறான நெருக்குதல்களும் இத்தோடு முடிந்து விடப்போவதுமில்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் ☞2

## கத்தியால் குத்தப்பட்டு குடும்பஸ்தர் கொலை

களுத்துறை, மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பின்னகொட பிரதேசத்தில், குடும்பஸ்தர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பின்னகொட, அகலவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு ☞2

## சீனக்கப்பலின் வருகையின் பின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்., வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் நடைபெற்ற அமிர்தலிங்கத்தின் 95ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர்களுக்கு கிடைத்த ஆளுமைகளில் தனித்துவமானவர் அமிர்தலிங்கம். இந்தத் தீவில் தமிழர்களின் தனி நாட்டுக்கான போராட்டத்துக்கு விதை போட்டவர்களில் அவரும் ஒருவர். இந்த விடயம் தொடர்பில் பல விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால், தனி நாட்டுக்கான தமிழ் மக்களின் ஆணை, அமிர்தலிங்கத்தால்தான் கிடைக்கப்பெற்றது என்பதை மறுதலிக்க முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், வன்னியில் நடத்திய சர்வதேச செய்தியாளர் மாநாட்டில் அதை உறுதிப்படுத்தும் விதமாக கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்த இலங்கைத் தீவைச் சுற்றி நடக்கின்ற பூகோள அரசியலைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப காய்களை நகர்த்திய ஒரு மகத்தான இராஜதந்திரியாகவும் அமிர்தலிங்கத்தைச் சொல்ல முடியும்.

இன்று பலர் பூகோள அரசியல், இராஜதந்திரம் என்று கூறிக்கொண்டு எமது மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில், இந்தியாவின் பங்கைப் புரிந்து கொண்டு, சிங்கள தேசத்தவரின் சடுகுடு ஆட்டத்தைக் கணித்து அதற்கு ஏற்ப தமிழர்களின் விடயத்தில் அவர் சாதித்துக்காட்டினார்.

அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரை மற்றும் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் ஆகியோரை நேரில் சந்தித்துப் பேசி, ஈழத் தமிழர்களுக்குச் சார்பான நிலைப்பாட்டை இந்தியாவை எடுக்க வைப்பதில் கனதியான பங்காற்றியவர் அமிர்தலிங்கம்.

ஆனால், அதன் பின்னரான சூழலில் இந்தியா, ஈழத் தமிழ் மக்களை பகடைக் காய் ஆக்க முயன்றபோது அதை எதிர்த்துக் குரல் கொடுத்தவரும் அவர்தான்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போதாமைகளைப்பற்றியும், அதன் ஊடாக ஈழத் தமிழர்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பது பற்றியும், அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதம் அனுப்புவதற்கும் அமிர்தலிங்கமே தலைமை தாங்கினார்.

ஆயுதப் போராட்டக்காலம் முடிவுக்கு வந்த பின்னர், தமிழர்களுக்கு என்று வெளிவிவகாரக் கொள்கை இருக்கின்றதா என்று கேட்கும் அளவுக்கு நிலைமைகள் படுமோசமாகவே உள்ளன.

தற்போது வல்லாதிக்க வல்லூறுகளுக்கு இலங்கை என்ற தீவு இரையாகிக் கொண்டிருக்கின்றது. சீனாவின் உளவுக் கப்பலின் வருகையோடு அந்தப் பூகோள அரசியல் கொதிநிலைக்கு சென்றுள்ளது. இந்தக் கொதிநிலையும் இவ்வாறான நெருக்குதல்களும் இத்தோடு முடிந்து விடப்போவதுமில்லை.

எம்மைச் சுற்றி நடக்கின்ற இந்த விடயங்களை எப்படி நாம் கையாளப்போகின்றோம்? தனித்துவமான இனமாக இந்தத் தீவில் வாழ்வதற்கு துடிக்கும் நாங்கள் அதற்காக என்ன செய்யப்போகின்றோம் என்ற திடமான வழிவரைபடம் கூட இல்லாமல், எல்லாவற்றுக்கும் இழுத்த இழுப்பாகச் சென்று கொண்டிருக்கின்றோம்.

ஈழத் தமிழர்களின் வெளிவிவகாரக் கொள்கை என்பது தனிமனிதர்கள் சிலரின் கொள்கையாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அன்று அமிர்தலிங்கம் போன்றோர் தூரநோக்கோடும்தீர்க்கதரிசனத்தோடும் விடயங்களைக் கையாண்டனர். ஆனால், இன்று, தத்தமது தனிப்பட்ட நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் வெளிவிவகாரத்தை கையாண்டு, ஈழத் தமிழர்களைத் தொடர்ந்தும் தத்தளிக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஈழத் தமிழினம் கரைசேராமல் இருப்பதற்கு இதுவும் பிரதான காரணம். இந்தியா போன்றதொரு வல்லரசு எமது விடயத்தில் கரிசனை காண்பிக்கும்போது அதற்கு நாம் செங்கம்பளம் விரித்திருக்க வேண்டும். அதைவிடுத்து, பாரததேசம் நொந்து கொள்ளும் அளவுக்கு எமது செயற்பாடுகள் அமைந்துவிடக்கூடாது. அவர்கள்எம்மைப்பேச்சுக்குஅழைக்கும் போது அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வதே புத்திசாலித்தனம்.

இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பில் ஈழத் தமிழர்களை மையமாகக் கொண்ட கட்சிகள் எல்லாவற்றுக்கும் பொதுவான ஒரு நிலைப்பாடே இழையோடுகின்றது. அதாவது, ஈழத் தமிழர்கள் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளமாட்டார்கள் என்ற உறுதியை அனைத்து தமிழ் கட்சிகளும் வழங்கி நிற்கின்றன என்பதற்கும் அப்பால் அதுதான் உண்மை.

ஈழத் தமிழர்கள் விடயம் இந்தியாவைத் தாண்டி நகராது என்பதை உணர்ந்தமையாலேயே தமிழ் கட்சிகள் இந்த விடயத்திலாவது ஒன்றுபட்டு நிற்கின்றன. ஆனாலும், தமிழர்களின் வெளிவிவகாரத்தைக் கையாளும் ஒரு சில நபர்கள், இந்த யதார்த்தத்தைப் புரியாது செயற்படுவது என்பது எமது தலையில் நாமே மண் அள்ளிப் போடுவதைப்போன்றது - என்றார்.

## யாழ். நகரில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்கசிவு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மகாவலி ஆற்றில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அட்டை, மடிக்கணினி, 2 வங்கி அட்டைகள், பரீட்சை நுழைவுச்சீட்டு, பணப்பை மற்றும் ஒரு ஜோடி காலணி என்பன அங்கிருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, காணாமல்போனவர் புலகஹாபிட்டிய, அஹெலியகொட பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் எனத் தெரியவந்துள்ளது.

காணாமல்போன நபரைத் தேடும் பணியில் பொலிஸார், கடற்படையின் உயிர்காக்கும் படையினர் மற்றும் பிரதேசவாசிகள் ஈடுபட்டுள்ள நிலையில் பேராதனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ் மக்கள் பக்கம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில், மேற்படி நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த அவர், அங்கு நடைபெற்ற சந்திப்புக்கள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய பயணத்தில் முதலில் ஜேர்மன் நாட்டுக்கே எனது விஜயம் அமைந்திருந்தது. ஜேர்மன் நோக்கிச் செல்வதற்கு மூன்று காரணங்கள் பிரதானமாக இருந்ததோடு அந்நாடு இலங்கையின் விடயத்தில் முக்கியத்துவத்துமான தாகவும் உள்ளது.

ஜேர்மனியானது ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பிரதான நாடாக உள்ளதோடு, சர்வதேச நாணய நிதியத்திலும் வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றது.

அத்துடன், ஐ.நாவில் இலங்கை பற்றிக்கொண்டுவரப்படவுள்ளபிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கும் நாடாகவும் உள்ளது.

அந்தவகையில் அந்நாட்டுக்கு நிலைமைகள் பற்றிய தெளிவுபடுத்தல்களையும் அடுத்தகட்டச் செயற்பாடுகள் பற்றிய கோரிக்கைகளையும் முன்வைக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

அங்கு விஜயம் செய்திருந்த நான், ஜேர்மன் அதிபர் ஓலாப் ஸ்கோல்ஸின் வெளிவிவகாரங்களுக்கான செயலாளர் இயன்ஸ் ஸ்பொட்னருடன் சந்திப்பொன்றை நடத்தினேன். இவர் இலங்கைக்கான ஜேர்மனிய தூதுவராகவும் செயற்பட்டவர் என்பது முக்கியமானதாகும்.

அதன்தொடர்ச்சியாக நோர்வேக்குச் சென்று, நோர்வேயின் வெளிவிவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் துரே ஹைட்ரமுடன் சந்திப்பை நடத்தினேன். போர் நடைபெற்ற காலப்பகுதியில் இவர் இலங்கைக்கான நோர்வேயின் தூதுவராக இருந்தவர்.

தொடர்ந்து, டென்மார்க், பின்லாந்து, சுவீடன் உள்ளிட்ட நாடுகளுக்கு விஜயம் செய்ததோடு அங்கும் வெளிவிவகாரத் துறையின் பல்வேறு பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடியிருந்தேன்.

இந்த நாடுகளின் பிரதிநிதிகளுடனான உரையாடல்களின்போது, அடுத்து வரும் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் கொண்டுவரப்படவுள்ள இலங்கையின் பொறுப்புக்கூறல் பற்றிய பிரேரணை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், தமிழ் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாகவுள்ள அரசியல் தீர்வுக் கோரிக்கை மற்றும் அதற்கான அவசியம் குறித்து தெளிவுபடுத்தப்பட்டதோடு, அரசியல் தீர்வொன்றை வழங்கும் பட்சத்தில் முதலீடுகளைச் செய்வதற்கான ஏதுநிலைகள் பற்றியும் கரிசனை கொள்ளப்பட்டது - என்றார்.

## நில்வள கங்கையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காதலியே தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கம்புருபிட்டிய, மீபாவிட்ட, ரன்சகொட பிரதேசத்தில் வசித்து வந்த அஷானி ஹன்சிகா என்ற 19 வயதுடைய யுவதியே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று முற்பகல் தேடுதல் நடவடிக்கையின்போது அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

மாத்தறை, பிட்டபெத்தர, நில்வள கங்கையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நீராடச் சென்று காணாமல்போன நான்கு இளைஞர்களில் மூவரின் சடலங்களைக் கடற்படையின் நீர்மூழ்கிக் குழுவினரினால் நேற்றுப் பிற்பகல் கண்டெடுக்க முடிந்தது.

எனினும், காணாமல்போன மனுஷ்க யோஹான் என்ற இளைஞரைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## தீர்வை வழங்காமல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:-

நாங்கள் அரசியல் தீர்வு விடயம் சம்பந்தமாக அரசுடன் மாத்திரமன்றி ஏனைய தரப்புக்களுடனும் பேசியிருக்கின்றோம். இது தொடர்பான எமது நடவடிக்கை தொடர்கின்றது. நாட்டின் தேசிய பிரச்சினைகளில் அரசியல் தீர்வு விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்களின் சரித்திர ரீதியான தாயகம். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அவர்களின் வதிவிடப் பிரதேசம். எனவே, தமிழ்பேசும் பிரதேசம் ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கில் அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம்.

இந்தக் கருத்து எல்லோராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு - வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், அது சில காரணங்கள் நிமித்தம் இழுபடுகின்றது.

மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் இந்த விடயம் தொடர்பில் காலத்தைக் கடத்துகின்றன. இதை இனியும் அனுமதிக்க முடியாது.

காலம் தாழ்த்தாமல் தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இது தொடர்பில் அனைத்துத் தரப்பினருடனும் நாங்கள் தொடர்ந்து பேசுவோம். இந்த விடயத்தில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

## அரைவாசிப் பேருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் சமூகவலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மின்சார சபையில் உள்ள 26 ஆயிரம் பணியாளர்களுக்குப் பதிலாக அதிலுள்ள அரைவாசிப் பணியாளர்களால் திறமையாகப் பணியாற்ற முடியும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலிய சேமிப்பு முனையம் என்பவற்றில் பணிபுரியும் 4 ஆயிரத்து 200 பேருக்கு பதிலாக, அங்குள்ள 500 பணியாளர்களால் திறமையாகப் பணியாற்ற முடியும்.

திறமையற்ற பணியாளர்களால்தான் தொழிற்சங்கங்கள் வளர்கின்றன. இலங்கையில் உள்ள பெரும்பாலான அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது இன்றியமையாதது.

அரசியல் தீர்மானங்கள், அரசியல் நியமனங்கள், தவறான நிர்வாகம் மற்றும் திறமையின்மையே அரச நிறுவனங்களின் வீழ்ச்சிக்குக் காரணம். அரசாங்க நிறுவனங்களில் செயல்திறன் அடிப்படையிலான சம்பள முறை கட்டாயம் - என்றுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவில் அமைச்சர் முறைப்பாடு மேற்கொண்டிருந்தார். அத்துடன் கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் மின்சாரசபைத் திருத்தச் சட்டத்தை அமைச்சர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் எதிர்ப்புக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கான எதிர்ப்புக்களின் பின்னணி குறித்து ஆராயப்படும். தேவைப்படின் அமைச்சரவையின் முடிவு மீள் பரிசீலனை செய்யப்படும்.

- இவ்வாறு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தெரிவித்தார்.

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த இடங்களில் இதற்கு எதிர்ப்புக்கள் வந்தால் அந்த எதிர்ப்புக்களின் பின்னணி தொடர்பில் ஆராய வேண்டும். அரசியல் பின்புலத்துடனும் அந்த எதிர்ப்புக்கள் வரக்கூடும். இது தொடர்பில் அந்தந்த மாவட்டப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவோம். அமைச்சரவையின் முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமை வந்தால் அதையும் நாம் செய்வோம்.

அனைத்துச் செயற்றிட்டங்களும் மக்களின் நலன் கருதியே இருக்கும். மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் செயற்றிட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்காது. - என்றார்.

## கத்தியால் குத்தப்பட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று தெரிவித்துள்ளது.

இருவருக்கிடையிலான முறுகலே இந்தச் சம்பவத்துக்கு காரணம் என்று தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் வேத்தேவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வஞ்சக நாடே சீனா....!

இலங்கை விடயத்தை ஒட்டி இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் இராஜதந்திரப் பனிப்போர் முற்றியிருக்கின்றது. அது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.

இந்தியாவுக்கு மிக நெருக்கமான அயல்நாடாக இலங்கை இருக்கும்போது, அந்த உபகண்டத்தின் பாதுகாப்புக் கரிசனை குறித்துக் கவலை கொள்ளாமல் – சிந்திக்காமல் – இந்தியாவோடு முரண்பட்டு நிற்கும் சீனாவை இந்த பிராந்தியத்துக்குள் அதிகம் இழுத்து வந்து காலூன்ற வைத்த கொழும்பின் இராஜதந்திரம், அந்த முட்டாள்தனத்தின் மோசமான பெறுபேறை – விளைவை – இப்போது இருதரப்பு நெருக்குவாரமாகச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது

மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் இராஜதந்திரம் மூலம் சீனாவையும் இந்தியாவையும் சமாளிக்கலாம் என்று திட்டம் போட்ட கொழும்பு, இப்போது நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து கொண்டிருக்கலாம்

இலங்கையை ஒட்டிய இந்திய – சீன முரண்பாட்டில் இலங்கைத் தமிழர்கள் உள்வாங்க வேண்டிய முக்கிய கருத்தியல் நிலைப்பாடு ஒன்று உள்ளது. அதன் அடிப்படையில் இலங்கைத் தமிழர்கள் சில தீர்க்கமான தீர்மானங்களையும் எடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்

இந்தியாவை வைவதாகக் கருதிக் கொண்டு சீன தூதுவர் வெளியிட்ட நீண்ட கட்டுரையில், தமிழர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கிய அம்சங்கள் உள்ளன.

“........ பயங்கரவாதத்திற்கு எதிரான மூன்று தசாப்த கால போரையும் கடந்து, இப்போது இலங்கை உலகின் முன்னிலையில் மிகுந்த துணிச்சலுடனும் பெருமிதத்துடனும்தலைநிமிர்ந்துநிற்கிறது இலங்கை...’ என்கிறார் சீனத் தூதுவர்.

“....... அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாக விருப்பதுடன் இதன்போது பெரும்பாலும் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் மீண்டும் பேசுபொருளாகக் கூடும்.

”இலங்கை மக்கள் இன்னமும் மிகப்பாரிய பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்ற தற்போதைய சூழ்நிலையில், எப்போதும் மனித உரிமைகள் தொடர்பில் உபதேசம் செய்கின்ற நாடுகள், அந்நாட்டுக்கு (இலங்கைக்கு) எத்தகைய உதவிகளை வழங்கின என்று பலரும் எண்ணிப் பார்க்கக் கூடும்.

“அவர்கள் (அந்த நாடுகள்) அவசியமான ஆதரவை வழங்குவதன் மூலம் இலங்கையின் மனித உரிமைகள்நிலைவரம்முன்னேற்றமடைவதற்குஉதவுவார்களா? அல்லது அவர்கள் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தொடர்ந்து தலையீடு செய்வதற்கான ஓர் மறைமுகக்கருவியாக மனித உரிமைகளைப் பயன்படுத்துவார்களா?” – என்றும் சீனத்தூதுவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்தக் கட்டுரை மூலம் அவர் கூற முற்படுவது என்ன?

முப்பது வருட கால யுத்தத்தை வெற்றிகரமாக முடிக்கிறோம் என்ற பெயரில் இலங்கை தமிழர்களுக்கு எதிராகச் சிங்களப் படைகள் மேற்கொண்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மிக மோசமான மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் சிரத்தை எடுக்கக் கூடாது, அந்த அநீதிக்காக நீதி கோரி, பொறுப்புக் கூறலை நிலை நிறுத்த வலியுறுத்தி மேற்கு நாடுகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பெரும் அத்துமீறல்கள், அபத்தங்கள் என்பதைத்தான் சீனப் பிரதிநிதி கூறமுற்படுகின்றார்.

அதாவது, யுத்தத்தில் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு நீதி செய்யப்படக்கூடாது, அது பற்றி சர்வதேசம் கவலைப்படக்கூடாது என்று சுட்டுவதன் மூலம் சீன பிரதிநிதி தங்களை எவ்வாறு அடையாளப்படுத்துகின்றார்? வஞ்சிக்கப்பட்ட தமிழினத்திற்கு எதிராக, வஞ்சகம் புரிந்த தரப்போடு அணி சேர்ந்து ,அத்தரப்பை காபந்து பண்ண முயலும் சீனா தமிழர்களை பொறுத்தவரை வஞ்சக நாடே.

## தனுஷ்கோடியில் காற்றாலை அமைப்பதற்கு எதிர்ப்பு கறுப்புத் துணி கட்டி கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம்!






தனுஷ்கோடியில் கடலில் காற்றாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று (சனிக்கிழமை) பாம்பன் நாட்டுபடகு மீனவர்கள் கண்களில் கறுப்புத் துணி கட்டி கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளர்.

ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி கடல் பகுதியில் கடலில் மிதக்கும் காற்றாலை அமைக்க இந்திய, தமிழ் நாடு அரசு சார்பாக ரூபா 350 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தனுஷ்கோடி பகுதியில் கடலில் மிதக்கும் காற்றாலை அமைத்தால் அந்தப் பகுதியில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். மேலும் அந்த பகுதி பாதுகாக்கப்பட்ட மன்னார் வளைகுடா கடல் பகுதியாக உள்ளதால் அரிய வகை கடல் வாழ் உயிரினமான கடல் பசுவை, கடல் குதிரை உள்ளிட்டவை அழியும் உயிரிழக்கக்கூடும் என்பதால் கடலில் காற்றாலை அமைக்கும் திட்டத்தைக் கைவிடவும், அந்தத் திட்டம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்பாட்டம் நடத்தியுள்ளனர். இந்த ஆர்பாட்டத்தில் கலந்து கொண்ட நாட்டுப்படகு மீனவர்கள் மற்றும் ஏ.ஐ.டி.யூ.சி மீனவ தொழிற்சங்கத்தினர் இந்திய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பி கண்டனத்தைப் பதிவு செய்தனர்.

## வர்த்தகரின் மகனைக் கடத்தி கப்பம் கோரியோர் கைது!

கப்பம் கோரி கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட வத்தளை கந்தானை – ஹப்புகொட பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரின் 22 வயதான மகன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் நான்கு பேரைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று (சனிக்கிழமை) முற்பகல் 11 மணியளவில் மேற்படி இளைஞர் அடையாளம் தெரியாத குழுவொன்றால் வாகனத்துடன் கடத்தப்பட்டிருந்தார்.

இதனையடுத்து இளைஞரை விடுவிப்பதற்காக அவரது தந்தையிடம் 56 லட்சம் ரூபா கோரப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். இளைஞரின் தந்தையுடன் ஏற்பட்ட பணப்பிரச்சினை தொடர்பில் இளைஞர் கடத்தப்பட்டார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் இளைஞனின் தந்தையால், 56லட்சம்ரூபாவைப்பிலிடப்பட்ட பின்னரே இளைஞர் விடுவிக்கப்பட்டார் எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்தநிலையில் பணம் வைப்பிலிடப்பட்ட வங்கி தரவுகளுக்கு அமைய நான்கு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மன்னார் மாவட்ட காணிப்பிரச்சினை தொடர்பில் விசேட கலந்துரையாடல்!

மன்னார் மாவட்டத்தில் காணப்படும் காணி தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று (சனிக்கிழமை) மன்னார் அபிவிருத்தி குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு காணி அமைச்சின் செயலாளர் பங்கு பற்றுதலுடன் மன்னார் மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் பிரதேச ரீதியாகக் காணப்படும் காணி தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன் மன்னார், மாந்தை மேற்கு , நானாட்டான் மற்றும் மடு ஆகிய பிரதேச மக்கள் பாவனையில் காணப்படும் காணிகள் பிரதேச செயலாளர்களின் ஆலோசனை இல்லாமல் வன வளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் ஊடாகக் கொண்டுவரப்பட்டுள்ளமையால் பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் எழுந்துள்ளமை தொடர்பாக பிரதேச செயலாளர்கள் ஊடாக காணி அமைச்சின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அதே நேரம் அரச காணிகளில் வசிக்கும் மக்கள் நீண்ட நாள்களாகக் காணி ஆவணங்கள் கிடைக்காமல் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றமை தொடர்பாகவும் காணி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலையில் மேற்படி விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதாகவும், அதே நேரம் காணி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான பிரச்சினைகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாக காணி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் காணி அமைச்சின் செயலாளர், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் வடமாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் உட்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# கிளர்ச்சிப்படைகள் லிபியாவில் மோதல்


## 13 பேர் பலி; 95 பேர் காயம்

லிபியாவில் கிளர்ச்சிப்படையில் இரு தரப்புக்கு இடையேயான மோதலில் 13 பேர் உயிரிழந்தனர். வட ஆபிரிக்காவில் உள்ள லிபியாவில் உள் நாட்டு போர் நடந்து வருகிறது. இங்கு உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட அரசு படைகளுக்கும் கலிபா ஹப்டர் தலைமையிலான கிளர்ச்சி படையினருக்கும் கடும் சண்டை நடந்து வருகிறது. இந்த மோதலில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி பொது மக்கள் கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனிடையே, லிபியாவில் பல்வேறு கிளர்ச்சி–யாளர்கள் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த குழுக்களுக்கு இடையே அவ்வப்போது மோதல் அரங்கேறி வருகிறது. இந்நிலையில், ஹைதம் தஜோரியின் திரிபோலி விடுதலை பிரிவு கிளர்ச்சியாளர்களுக்கும் அப்தில் கானி அல் கில்கி தலைமையிலான கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தலைநகர் திரிபோலியில் நேற்று திடீரென மோதல் வெடித்தது.

இந்த மோதலின் போது துப்பாக்கிச்சூடு, வன்முறை சம்பவங்கள் அரங்கேறின. கிளர்ச்சி–யாளர்களின் இரு தரப்புக்கு இடையே நடந்த இந்த மோதலில் 13 பேர் உயிரிழந்தனர். 95 பேர் படுகாயமடைந்தனர். பல்வேறு கட்டடங்கள், வாகனங்களுக்கு கிளர்ச்சியாளர்கள் தீவைத்து கொளுத்தியமையால் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

# 2 லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் பாக். வெள்ளத்தில் முற்றிலும் அழிவு



பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள வெள்ளத்திற்கு 2லட்சம்வீடுகள்முற்றிலும்அழிந்துபோயுள்ளன என ஐ.நா. அறிக்கை தெரிவிக்கின்றது.

பாகிஸ்தானில் தென்மேற்கு பருவ மழைக் காலம் தொடங்கிய நிலையில் கடந்த 3 மாதங்களாக அங்கு கனமழை, வெளுத்து வாங்குகிறது. கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத இந்த மழைப்பொழிவால் பாகிஸ்தானின் பாதி நகரங்கள் வெள்ளத்தில் தத்தளித்து வருகின்றன. கனமழை மற்றும் வெள்ளத்துக்கு நாடு முழுவதும் சுமார் 3கோடி 30 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். வெள்ளம் அதிகம் பாதித்த 110 மாவட்டங்களில் சுமார் 57 லட்சம் பேர் தங்குமிடம் மற்றும் உணவு இல்லாமல் உள்ளனர். கனமழை, வெள்ளத்துக்கு இதுவரை 982 பேர் பலியாகி உள்ளனர் என தேசிய பேரிடர் ஆணையம் தெரிவித்துள்ளது. அதே போல் கனமழை, வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் 113 பேருக்கு பலத்த காயங்களும், 1,456 பேருக்கு லேசான காயங்களும் ஏற்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் மழை, வெள்ள பாதிப்புகளை சமாளிக்கும் வகையில் அவசர நிலையை பிரகடனப்படுத்தி, அரசு மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், ஐ.நா.வின் மனிதநேய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் வெளியிட்டு உள்ள செய்தியில், 2.18 லட்சம் வீடுகள் முற்றிலும் அழிந்து உள்ளன. 4.58 லட்சம் வீடுகள் பகுதியளவு சேதமடைந்து உள்ளன என தெரிவித்து உள்ளது. இதுதவிர, 20 லட்சம் ஏக்கர் பயிர்கள் பாதிக்கப்பட்டு உள்ளன. 7.94 லட்சம் கால்நடைகள் உயிரிழந்து உள்ளன என்றும் தெரிவித்து உள்ளது.

கனமழையால் பாதித்த 116 மாவட்டங்களில் 30 ஆண்டு தேசிய சராசரியை விட 2.87 மடங்கு அதிக மழைப்பொழிவும், சில மாகாணங்களில் 5 மடங்குக்கு கூடுதலாகவும் மழை பொழிந்துள்ளது என தெரிவித்து உள்ளது. 3 ஆயிரம் கி.மீ. தொலைவிலான சாலைகளும் மற்றும் 145 பாலங்களும் சேதமடைந்து, மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு தப்பி செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். அவசர தேவைக்கான சுகாதார நலன், காய்கறி சந்தைகள் அல்லது பிற முக்கிய சேவைகளை தேடி செல்வதற்கும், உதவி தேவையான நபர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்வதற்கான வசதிகளும் கட்டுப்பட்டுத்தப்பட்டு உள்ளன. இதேபோன்று, 17,566 பள்ளி கூடங்கள் சேதமடைந்தோ அல்லது முற்றிலும் அழிந்தோ போய் விட்டன. 5,492 பள்ளி கூடங்களில் புலம் பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டு உள்ளனர் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

# கேளிக்கைக் கூட்டத்திற்குள் புகுந்த லொறிக்குப் பலர் பலி

## நெதர்லாந்தில் சோகம்





நெதர்லாந்து நாட்டில் பொது இடத்தில் நடந்த கேளிக்கை நிகழ்ச்சியின்போது கூட்டத்தின் இடையில் லொறி புகுந்ததில் பலர் பலியாகி உள்ளனர்.

நெதர்லாந்து நாட்டில் தெருக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் சமூக நிகழ்ச்சிகள் நடத்தப்படுவது வழக்கம். இதில், திரளான மக்கள் வேற்றுமையின்றி ஒன்று கூடி கொண்டாட்டத்தில் ஈடுபடுவது உண்டு. இதனை தொடர்ந்து, தெருவெங்கும் விழா கோலம் பூண்டு காணப்படும். பலூன்களை பறக்க விட்டும், தோரணங்களை கட்டித் தொங்க விட்டபடியும், மக்கள் பேரணியாக நடந்தும், கார் உள்ளிட்ட வாகனங்களிலும் செல்வார்கள். சில சமயம் இதுபோன்ற தெருவில் நடைபெறும் நிகழ்ச்சிக்காக உள்ளூர் விடுமுறையும் விடுவதுண்டு.

இதேபோன்றதொரு நிகழ்ச்சி நெதர்லாந்தின் தெற்கு பகுதியில் நியூ பெய்ஜர்லேண்ட் நகரில் நடந்தது. இதில், மக்கள் பலர் கலந்து கொண்டுள்ளனர். இந்நிலையில், ரோட்டர்டேம் பகுதியில் இருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்த அந்த பகுதியில் திடீரென வேகமுடன் வந்த லொறி ஒன்று கூட்டத்தில் புகுந்துள்ளது. இந்த சம்பவத்தில் பலர் உயிரிழந்து உள்ளனர். குறைந்தது 3 பேர் உயிரிழந்து இருக்க கூடும் எனக் கூறப்படுகிறது. பலர் காயமடைந்து உள்ளனர். ஸ்பெயின் நாட்டு போக்குவரத்து நிறுவனம் ஒன்றின் பெரிய வகை சரக்கு ஏற்றி செல்ல கூடிய லொறியே விபத்தை ஏற்படுத்தி உள்ளது. லொறி யை அகற்றும் பணியும் நடந்து வருகிறது. இதுபற்றி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்வி பெறுவதற்கு ஆப்கான் பெண்கள் வெளிநாடு செல்லத் தலீபான்கள் தடை



ஆப்கான் பெண்கள் கல்வி கற்க வெளிநாடு செல்வதற்கு தலீபான்கள் தடை விதித்துள்ளனர். ஆப்கானிஸ்தானை தலீபான்கள் கடந்த ஓர் ஆண்டாகஆட்சிசெய்துவருகின்றனர்.

அவர்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்த நாள் முதல் பெண்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் வகையில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர். குறிப்பாக பெண் குழந்தைகள் 6 ஆம் வகுப்புக்கு மேல் கல்வி கற்பதற்கு தலீபான்கள் தடைவிதித்தமை சர்வேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்தத் தடையை திரும்ப பெறக்கோரி உலக நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் தலீபான்கள் அதை புறக்கணித்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் பெண்கள் வெளிநாடுகளுக்கு சென்று கல்வி கற்பதற்கும் தலீபான்கள் தடை விதித்துள்ளனர். கல்விக்காக கஜகஸ்தான் மற்றும் கத்தார் நாட்டுக்கு செல்வதற்காக காபூல் விமான நிலையத்துக்கு வந்த மாணவிகளை தலீபான்கள் விமானத்தில் ஏறவிடாமல் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினர். வெளிநாடு செல்வதற்காக மாணவர்களும், மாணவிகளும் விமான நிலையம் வந்தநிலையில்மாண வர்களை மட்டும் விமானத்தில் பயணிக்க அனுமதித்த தலீ பான்கள், மாணவிகளுக்கு அனுமதி வழங்க மறுத்து விட்டனர்.

# சசிகலா, டி.டி.வி.தினகரன் இருவரையும் விரைவில் சந்திக்கின்றாராம் ஓ.பி.எஸ்.!



சென்னை,ஒக்.28

"கட்சி நலன் கருதி, சசிகலா, டி.டி.வி.தினகரன் இருவரையும் விரைவில் சந்திப்பேன் என்று அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்திருக்கிறார்.

அ.தி.மு.க.வில் எடப்பாடி பழனிசாமியும், ஓ.பன்னீர்செல்வமும் எதிரும், புதிருமாக செயல்பட்டு வருகிறார்கள். எடப்பாடி பழனிசாமி தலைமை இல்லாத அ.தி.மு.க.வை உருவாக்குவதுதான் ஓ.பன்னீர்செல்வத்தின் திட்டம்.

எடப்பாடி பழனிசாமியை பொறுத்தவரை அ.தி.மு.க.வில் மீண்டும் சசிகலா குடும்பம் வரக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார். எனவே சசிகலா, டி.டி.வி.தினகரனை எந்த நிலையிலும் கட்சியில் சேர்ப்பதில்லை என்பதில் தீவிரமாக இருக்கிறார். இந்த வியத்தில் உறுதியாக இருப்பதால்தான் கட்சி தொண்டர்கள் ஆதரவு இருப்பதாக எடப்பாடி பழனிசாமி கருதுகிறார். ஆனால், சசிகலாவுக்கு எதிராக ஒரு கட்டத்தில் தர்மயுத்தம் நடத்திய ஓ.பன்னீர்செல்வம் இப்போது சசிகலாவுக்கு ஆதரவு கரம் நீட்டி இருக்கிறார். எடப்பாடி பழனிசாமி தலைமை இல்லாத அ.தி.மு.க.வை உருவாக்குவதுதான் ஓ.பன்னீர்செல்வத்தின் திட்டம். அதற்காகத்தான் மாவட்டங்களில் சசிகலா, டி.டி.வி.தினகரன் ஆதரவாளர்களும் இணைந்து செயல்படும்படி ஓ.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்து இருந்தார். எப்படியாவது தனது தரப்பை பலப்படுத்த திட்டமிட்டுள்ள ஓ.பன்னீர் செல்வம், சசிகலா, டி.டி.வி.தினகரன் ஆகியோரையும் கட்சியில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்துள்ளார். இதற்காக சசிகலாவையும், டி.டி.வி.னகரனையும் நேரில் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார். இதுபற்றி ஓ.பன்னீர்செல்வம் கூறுகையில், கட்சி நலன் கருதி, சசிகலா, டி.டி.வி.தினகரன் இருவரையும் விரைவில் சந்திப்பேன் என்றார்.

## 'கிணத்தைக் காணோம்' வடிவேலு பாணியில் செல்போன் டவரைக் காணோம் எனப் புகார்!

### – அதிர்ச்சியில் உறைந்த வாழப்பாடி பொலிஸார்...!



வாழப்பாடி,ஓக.28

செல்போன் கோபுரம் (டவர்) இருந்த இடத்தில் கொங்கிரீட் தூண்கள் மட்டுமே காட்சி அளித்தமையால் ஊழியர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

சேலம் மாவட்டம் வாழப்பாடி அருகே மேட்டுப்பட்டி கிராமத்தில் சென்னையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் சார்பில் செல்போன் டவர் அமைக்கப்பட்டது. இந்த செல்போன் டவரைப் பாதுகாக்க அப்பகுதியை சேர்ந்த ஒருவரை நியமித்து இருந்தனர். இந்த நிலையில் கடந்த ஜுலை மாதம் இறுதியில் ஒரு கும்பல் அங்கு வந்து, அங்கிருந்த பாதுகாவலரிடம் சில ஆவணங்களைக் காட்டி இந்த செல்போன்டவர் செயல்பாடற்று உள்ளது, எனவே இதைக் கழற்றி வேறு இடத்தில் நட உள்ளோம் என்று காவலரிடம் தெரிவித்தனர். பின்னர், அந்த கும்பல் செல்போன் டவரை, இராட்சத கிரேன் எந்திரங்களைக் கொண்டு கழற்றியது. அந்த பகுதியில் வசிப்பவர்களும் இது பற்றி கேட்டபோது, மர்ம கும்பல் அதையே தான் கூறியது. இதனால் அங்கிருந்தவர்கள், சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் தான் என நம்பினர்.

இதையடுத்து மர்ம கும்பல் செல்போன் டவர் முழுவதையும் கழற்றிக் கடத்திச் சென்று விட்டது. இதனிடையே கடந்த சில தினங்களுக்கு முன்பு சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்தை சேர்ந்த பணியாளர்கள் செல்போன் டவரில் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக அங்கு வந்து பார்த்தனர். அப்போது அங்கு செல்போன் டவர் மாயமாகி இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

செல்போன் டவர் இருந்த இடத்தில் கொங்கிரீட் தூண்கள் மட்டுமே காட்சி அளித்தன. இதைக் கண்டு அவர்கள் திடுக்கிட்டனர். இது பற்றி நிறுவனத்தின் மேலாளரான சேலத்தை சேர்ந்த, தமிழரசன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில், வாழப்பாடி பொலிஸார் வழக்குப்பதிவு செய்து டவரை திருடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கிரேன் உள்ளிட்ட வாகனங்கள் குறித்து சி.சி.டி.வி. கேமிராக்களில் பதிவாகி உள்ளனவா என ஆய்வு செய்து வருகின்றனர்.

திருடப்பட்ட செல்போன் டவரின் மதிப்பு ரூ. 25 லட்சம் இருக்கும். தமிழகத்தில் 100க்கும் மேற்பட்ட செல்போன் டவர்கள் தற்போது செயல்பாடற்று காணப்படுகின்றன. இவற்றை குறிவைத்து மர்ம கும்பல் சேலம், நாமக்கல் மாவட்டங்கள் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் கைவரிசை காட்டி வருகிறது. குறிப்பாக ஒரு குறிப்பிட்ட தனியார் செல்போன் நிறுவனத்திற்கு சொந்தமான பல்வேறு செல்போன் டவர்களை அந்த மர்ம கும்பல் குறி வைத்து திருடியுள்ளது என்பது பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த நூதன திருட்டில் ஈடுபட்ட கும்பல் குறித்து வாழப்பாடி பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.





## மத்திய பிரதேசத்தில் கல் எறியும் திருவிழா

### பாதுகாப்பு ஏற்பாடுகள் மும்முரம்

சிந்த்வாரா, ஓக.28

மத்திய பிரதேசத்தில் நடைபெறும் கல் எறியும் திருவிழாவில், பாதுகாப்புக்காக டாக்டர்கள் மற்றும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மத்திய பிரதேசத்தில், முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் தலைமையில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி நடக்கிறது. இங்குள்ள சிந்த்வாரா மாவட்டத்தில் நடக்கும், 'கோட்மர்' எனப்படும் கல் எறியும் பாரம்பரிய திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. இந்த விழாவின் போது, ஜாம் ஆற்றின் இருபுறமும் சாவர்கான் மற்றும் பந்தூர்னா கிராமங்களைச் சேர்ந்த மக்கள் திரண்டு, மறுபுறம் கற்களை வீசுவர்.

அப்போது, ஆற்றின் நடுவில் உள்ள ஒரு மரத்தில் ஏற்றப்பட்டிருக்கும் கொடியைப் பறிக்க போட்டி நடைபெறும். கடந்த காலங்களில் நடைபெற்ற இந்த விழாவில், பலர் உயிரிழந்த, காயமடைந்த சம்பவங்கள் நடந்துள்ளன. இந்நிலையில், சிந்த்வாராவில் நேற்று கல் எறியும் விழா தொடங்கியது.

இதையடுத்து, 'அங்கு 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. பாதுகாப்புக்காக மருத்துவர்களும், பொலிஸாரும் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். 'நிலைமையை கண்காணிக்க, 'ட்ரோன்'கள் எனப்படும் ஆளில்லா விமானங்களும் பயன்படுத்தப்படுகின்றன' என பொலிஸார் தெரிவித்தனர்.

## ஐ.நா.பொதுச் சபையின் தலைவர் இந்தியாவுக்கு 2 நாள்கள் விஜயம்

டெல்லி,ஓக.28

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் அப்துல்லா ஷாஹித் இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

கஜகஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த அவர், விமானம்வாயிலாக நேரடியாக டெல்லி விமான நிலையம் வந்தடைந்தார்.

அவரை மத்திய வெளியுறவுத் துறையைச் சேர்ந்த செயலாளர்களான பிரகாஷ் குப்தா மற்றும் கார்த்திக் பாண்டே ஆகியோர் நேரில் சென்று வரவேற்றுள்ளனர்.



இந்தச் சுற்றுப்பயணத்தின் போது இந்தியாவில் அவர் சில மூத்த தலைவர்களுடன் பேச்சு நடத்த உள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பில் நடந்து வரும் பிரச்சினைகள் மற்றும் உலக அமைப்புகளுடனான நாட்டின் உறவுகள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து பேசப்படவுள்ளது.

ஐ.நா. பொதுசபைத் தலைவர் இங்கு துணை ஜனாதிபதி ஜெக்தீப் தன்கர் மற்றும் வெளியுறவு செயலாளர் வினய் மோகன் குவாத்ராவை சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இந்தியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஒருங்கிணைப்பாளர் ரோம்பி ார்ப்பையும் அவர் சந்திக்க உள்ளார்

இவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டுடன் நிறைவடைய உள்ளது குறிப்பிடத்தக்கது.

# சௌபாக்கியா வீட்டுத்திட்டத்தின் கீழ் கல்லடியில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சௌபாக்கியா வீட்டுத்திட்டத்திற்கான ஆரம்ப பணிகள் தற்போது நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டு வருகின்ற நிலையல், சமுர்த்தி திட்டத்தில் மிக முக்கிய மான ஒரு செயற்பாடாக வறிய மக்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.


இவ்வாறாக ஆறரை லட்சம் ரூபா சௌபாக்கியா வீட்டுத்திட்டம், இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபா சௌபாக்கியா வீட்டுத்திட்டம், திரிபியச வீட்டுத்திட்டம், லொத்தர் சீட்டிழுப்பு வீட்டுத்திட்டம் மற்றும் வீடுகள் திருத்துவதற்காக ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி வசதி என சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஆண்டு தோறும் பல்வேறு வீட்டுத்திட்டங்கள் மூலம் சமுர்த்தி நிவராணம் பெறும் பயனாளிகளுக்கு வீடுகள் தொடர்பான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கல்லடி சமுத்தி வலயத்தின் கல்லடி உப்போடை கிராமசேவர் பிரிவைச்சேர்ந்த சுப்பிரமணியம் கோமளரெத்தினம் எனும் சமுர்த்தி பயனாளிக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக சௌபாக்கிய விசேட வேலைத்திட்டத்தின் கீழ் ஆறரை லட்சம் ரூபா பெறுமதியான வீட்டை அமைத்துக்கொள்வதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம் பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி தலைமைய முகாமையாளர் பரமலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர், கல்லடி சமுர்த்தி வலய வங்கி முகாமையாளர், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை பாரதிபுரத்தில் விதைகள், மரக் கன்றுகள் வழங்கல்





(ஹஸ்பர)

திருகோணமலை பாரதிபுரத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விவசாய ஊக்குவிப்பு தொடர்பிலான பயிர் செய்கைக்குரிய விதைகள்,மரக் கன்றுகள் கிளி மக்கள் லண்டன் அமைப்பினால் பாரதிபுரத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டன.

பயிர் செய்கைக்கான இந்த இலவசக் கன்றுகள் ஊடாக வீட்டுத் தோட்ட செய்கையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமூக செயற்பாட்டாளர் களான கே.பாமினி, தீபா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## காரில் போதைப்பொருள்கள் கல்முனையில் இருவர் கைது



(பாறுக் ஷிஹான்)

நீண்டகாலமாக சொகுசு காரில் சூட்சுமமாக ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள்களைக் கடத்தி சென்றவர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகா–மிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றை அடுத்து நேற்று சனிக்கிழமை மாலை சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரைவீதிபிரபலஉணவகத்திற்கருகில்விசேடஅதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் சொகுசு காரில் போதைப்பொருட்களுடன் பயணித்த இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான நபர்கள் கல்முனைப்பகுதியை சேர்ந்த 44 மற்றும் 23 வயது மதிக்கத்தக்கவர்கள். அவர்கள் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 6 கிராம் 80 மில்லிகிராம் மற்றும் ஹெரோயின் 5 கிராம் 580 மில்லி கிராம் மற்றும் 4 கைத்தொலைபேசிகள், கடத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட சொகுசு கார் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபர்களை சான்று பொருள்களுடன் நீதிமன்ற நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் பாரப்படுத்தினர்.

## ஓட்டமாவடி ஹிஜ்ராவில் உளவியல் கருத்தரங்கு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஓட்டமாவடி ஹிஜ்ரா பாடசாலையில் அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவின் ஏற்பாட்டில் பாடசாலை மாண வர்களுக்கு 'வெற்றிக்கான மூன்று திறவுகோல்கள்' என்ற தலைப்பிலும், மாணவர்களின் பெற்றோர்களுக்கு 'ஆரம்பப்பிரிவு பிள்ளைகளைக் கையாள்வது எவ்வாறு?' என்ற தலைப்பிலும் உளவியல் கருத்தரங்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் பிரபல உளவியல் நிபுணர் மனூஸ் அபுபக்கர் கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்கி னார். இக்கருத்தரங்கில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளரும், பாட சாலை மேம்பாட்டு இணைப்பாளருமான ஜே.தாஜுன் னிஸா கலந்து கொண்டு சிறப்பித்தார்.





## இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணை அனுரணை வழங்கவுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட 46/1பிரேரணை இந்தக் கூட்டத் தொடருடன் காலாவதியாகவுள்ள நிலையில் புதிய பிரேரணை ஒன்றை மீண்டும் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணை நாடுகள் தீர்மானித்துள்ளன.

இந்தப் பிரேரணையானது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 2012ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றப்பட்டு வரும் பிரேரணைகளின் உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கவுள்ளதோடு விசேடமாக 46/1 பிரேரரணையின் உள்ளடகத்தில் குறிப்பிடப்பட்ட சில முக்கிய விடயங்கள்காலநீடிப்புடன்உள்ளீர்க்கப்படவுள்ளன.

குறிப்பாக, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான சாட்சியங்களைத் திரட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 8 அங்கத்தவர்களைக் கொண்ட பொறிமுறையானது புதிய பிரேரணையிலும் உள்வாங்கப்படவுள்ளதோடு அதற்கான நிதி மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் பற்றியும் குறிப்பிடப்படவுள்ளது.

அதேநேரம், இலங்கையில் அண்மையில் நடைபெற்ற மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு எதிரான அடக்குமுறைகள்பற்றியவிடயங்களும்உள்வாங்கப்படவுள்ளதோடு அவசரகால நிலைமை மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்டமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டம் அமுலாக்கப்படும்என்றும், அதுவரையில் அந்தத் தடைச் சட்டத்தின் கீழ் எவரையும் கைதுசெய்வதில்லை என்றும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்குறுதி அளிக்கப்பட்ட நிலையில் தற்போது அதே சட்டத்தைப் பயன்படுத்தி கைதுகள் இடம்பெறுவது தொடர்பாகவும் விசேட கரிசனை கொள்ளப்படவுள்ளது.

மேலும், தமிழ் மக்களுக்கான பொறுப்புக்கூறல் விடயத்தில் எந்தவிதமான செயற்பாடுகளும் முன்னேற்றகரமானதாக இடம்பெறவில்லை என்பதோடு நீதியைக் கோரும் பயணத்தில் தொடரும் போரட்டங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்படவுள்ளது.

அத்துடன், தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு பற்றிய விடமும் புதிய பிரேணையில் உள்வாங்கப்படவுள்ளதோடு, அதனை நடைமுறைச் சாத்தியமாக்குவது பற்றிய வலியுறுத்தலும் செய்யப்படவுள்ளது.

இதனை விடவும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டாலும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கபடாமையால் அதன் பின்னணி குறித்த ஆய்வொன்றை மேற்கொள்வதற்கான பரிந்துரை செய்யப்படுவதற்கும் சாத்தியமான நிலைமைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், தற்போது இலங்கை குறித்த பிரேரணையின் வரைவுப் பணிகள் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளின் பங்கேற்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மெய்நிகர் வழியில் பங்கேற்று வருகின்றார்.

குறித்த வரைவுப்பணியானது விரைவில் நிறைவடையவுள்ளதோடு 51ஆவது கூட்டத்தொடர் நடைபெறும் காலப்பகுதியில் மேலதிக விடயங்கள் கவனம் செலுத்தப்பட்டு, அரசியல் மற்றும் சிவில் தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டு இறுதி செய்யப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான தலைமை பிரதிநிதியாக 2007ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வரும் றொரி மங்கோவனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பிக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, புதிய பிரேரணையில் உள்ளீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் கடந்த காலத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேணையிலிருந்து உள்ளீர்க்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை குறித்த புதிய பிரேணையைக் கொண்டுவரவுள்ள பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரனை நாடுகள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் ஆகியவற்றுடனும் தொடர்ச்சியான உரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

## புதிய புரளியே ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சர்வகட்சி அரசு என்பது புதிய புரளியாகும். சர்வகட்சி அரசு என்று கூறும் அரசு ஏன் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்த உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்கின்றது?

தற்போதைய தேவை பதவிகளைப் பகிர்ந்து கொள்வதல்ல. நாங்கள் ஒருபோதும் திருடர்களுடன் சேர்ந்து அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டோம்.

ஆனால், அரசு நாட்டுக்கு நல்ல விடயங்களைச் செய்யும்போது அதற்கு ஆதரவளிப்போம்.

தேங்காய் எண்ணெய், சீனி, பூண்டு மோசடிகள் மட்டுமன்றி கழிவுப்பொருள் கப்பலுக்குப் பணம் கொடுத்த மோசடிகளையும் உடனடியாக அம்பலப்படுத்த வேண்டும் – என்றார்.







காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## 'சிறந்த ஆசிரியர் – சிறந்த பாடசாலை' மட்டக்களப்பில் விசேட செயலமர்வு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

'சிறந்த ஆசிரியர்–சிறந்த பாடசாலை' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்புக் கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்குமான செயலமர்வொன்று நேற்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றுள்ளது.

மாணவர்களின் சீரான உளவளத்தை பேணுவதற்கான நோக்கோடு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதான மண்டபத்தில் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட உளநல ஒருங்கிணைப்பாளர் வைத்தியகலாநிதி டான் சௌந்தரராஜாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாத்தா குலேந்திரகுமார் கலந்து கொண்டார்.

பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அச்சுதன் முத்துலிங்கம், வைத்தியர் தர்ஷினி முருகுப் பிள்ளை மற்றும் வைத்தியர் கஸ்தூரி குகன் ஆகியோர் தங்களது முழுமையான பங்களிப்பை வழங்கினர்.

இள வயது கர்ப்பம், சமூகப்பிறழ்வு, போதைப்பொருள் பாவனை, குற்றச்செயல்கள், விபத்துக்கள், தற்கொலைகள் மலிந்துள்ள இந்தக்காலத்தில் சமூகத்தை சரியாக வழிநடத்திச் செல்லவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இயலுமையுள்ள அனைத்து தரப்பினரும் தங்களது பங்களிப்பை சமூகத்திற்காக முன்வந்து ஆதரவை தரவேண்டுமென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.

## கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனம்!



கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக கடற்றொழில் அமைச்சரும், கிளி நொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப் புக்குழுவை 2020 ஆம் ஆண்டு பொறுப்பெடுத்த சிறிது காலத்திலேயே மாவட்டத்தின் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வந்த இரண்டு கல்வி வலயங்களை உருவாக்கும் திட்டத்தை நிறைவேற்றியிருந்த அமைச்சர் டக்ளஸ், புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி வடக்கு மற்றும் தெற்கு வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்விசார் உத்தி யோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளிட்டோரை தனித்தனிக் குழுக்களாகச் சந்தித்து அந்தந்த வலயங்களின் தேவைகள் தொடர்பாக விசேடமாக ஆராய்ந்தார்.

ஓகஸ்ட் 16 ஆம் திகதி கிளிநொச்சி தெற்கு வலயத்துக்கான விசேட சந்திப்பை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் கமலராஜன் தலைமையிலான குழுவினருடன் நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தொடர்ந்து 17 ஆம் திகதி கிளிநொச்சி வடக்கு வலயத்துக்கான சந்திப்பை வடக்கு கல்வி வலயம் அமைந்துள்ள பரந்தன் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவனருள்ராஜா தலைமையில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது, வலயக கல்விப் பணிமனை மட் டத்திலான தேவைகள் முதற்கொண்டு, பாடசாலை களின் பௌதீக, ஆளணி மற்றும் இதர பற்றாக்குறைகள், உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடிய அமைச்சர், அவற்றுக்கான தீர்வை படிப்படியாகப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

கட்டடங்கள் அமைத்தல் போன்ற பௌதீக வளங்கள் சார்ந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதிவளம் தற்போது அரசாங்கத்திடம் இல்லாத காரணத்தால் அவற்றை சாத்தியமான வழிகளில் நீண்டகால அடிப்படையிலும், அதேசமயம், ஆளணித் தேவைகள் உள்ளிட்ட ஏனைய வளத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவும் இதன்போது அவர் உறுதியளித்தார்.

மேலும், மாவட்ட அளவில் கல்வி வளர்ச்சிக்கென விசேட நிதியம் ஒன்றை உருவாக்கி, அதனைக் கல்வித்துறை சார்ந்த தரப்புக்களே கையாண்டு தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றுவதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் பரிந்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா, மாவட்ட மட்டத்தில் பாரியளவிலான முதலீடுகளை மேற்கொள்ளும் தனியார் முதலீட்டாளர்களிடமிருந்து சமூகப் பொறுப்புணர்வு வேலைத்திட்டத்தின் கீழ் நிதியுதவிகளைப் பெற்று பல தேவைகளை நிறைவுசெய்ய ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்புக்களைத் தொடர்ந்து, 18 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை தந்திருந்த கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிறேமஜயந்த மற்றும் கல்வியமைச்சின் செயலாளர் ஜெயசிங்க ஆகியோருடனான சந்திப்பு ஒன்றை இரண்டு வலயங்களின் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுடன் மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்தச் சந்திப்பின்போது இரண்டு வலயங்களினதும் பல்வேறு தேவைகள் தொடர்பாகவும் கல்வியமைச்சரின் நேரடிக் கவனத்துக்கு எடுத்துச்செல்லவும் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதேபோல், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்றாம்நிலைக்கல்விச்சேவைநிறுவனங்களான ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய சமூக கல்வி அபிவிருத்தி நிறுவனம் மற்றும் திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்து அவர்களது தேவைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றவும் நடவடிக்கை எடுத்தார்.

# மருதமுனை நெசவாளர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வு





(நூருள் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் மருதமுனை பிரதேச நெசவாளர்கள், கைத்தறி உற்பத்தியாளர்கள் சமகாலத்தில் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஒன்று கல்முனை பிரதேச செயலக மண்டபத்தில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலியின் தலைமையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் முன்வைத்த வேண்டுகோளின் பேரில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் கலந்துகொண்டார்.

நெசவாளர்கள், கைத்தறி உற்பத்தியாளர்கள் சமகாலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நூல் இறக்குமதி செய்வதில் உள்ள குளறுபடிகள், விலையேற்றத்தினாலும், அரசியல் நெருக்கடியினாலும் நெசவுத்துறை பாதிப்படைந்த விடயங்கள், எரிபொருள் தட்டுப்பாட்டினால் மூலப்பொருள்கள் பெறுவதில் உள்ள சிக்கல்கள், உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் உள்ள பின்னடைவுகள் தொடர்பில் நெசவாளர்களுடன் ஹரீஸ் கலந்துரையாடினார். நெசவாளர்களின் பிரச்சினைகள், அவற்றைத் தீர்ப்பதற்கான மாற்றங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபை முதல்வர் ஏ.எம். றக்கிப் பிரதேச நெசவுத்துறையின் பிரச்சினைகளை முன்வைத்து அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கிப், மருதமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ். உமரலி, எம்.எஸ்.எஸ். நவாஸ், ஏ.எச்.ஏ ழாஹிர், முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.எம். முஸ்தபா, பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெஎபர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா, நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பு செயலாளர் எம்.ஏ. சப்ராஸ் நிலாம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்த கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2022இல் வெளியிடப்பெற்றது.